**மாத்தளை மாநகர சபை - 2022**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தளை மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக்க கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மாநகர சபைகள் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாத்தளை மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து நிலுவை கடன் மீதி ரூபா 42,923 ஆக இருந்த போதும் ஊழியர் கடன் கணக்கில் அது ரூபா 44,988 என மறை மீதி ஒன்றாக காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ஊழியர் கடன் கணக்கு ரூபா 87,911 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 கணக்கின் மூலம் சீராக்குவதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய 2023 ஆம் ஆண்டின் போது 13 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 340,068 தொகை மீளாய்வாண்டின் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | திட்டவட்டமாக பட்டியல் பெறுமதி இனங்கான முடியாமை மற்றும் தாமதம் காரணமாக பொறுப்புகளாக இறுதி கணக்கில் பதிவு செய்யப்படவில்லை என்பதாக | - மேற்படி - |
| (இ) | முன்னைய ஆண்டிற்குரிய மீளாய்வாண்டில் 12 சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்ட ரூபா 1,318,130 தொகை ஆண்டின் செலவினமாக கணக்கீடு | திட்டவட்டமாக பட்டியல் பெறுமதி இனங்கான முடியாமை மற்றும் தாமதம் காரணமாக | சரியாக இனங்காணப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. | பொறுப்புகளாக இறுதி கணக்கில் பதிவு செய்யப்படவில்லை என்பதாக | |
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்புகள் வட்டி ரூபா 568,078 தொகை குறைத்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய. நிலையான வைப்புக்கள் வட்டி ரூபா 23,072 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 கணக்கின் மூலம் சீராக்குவதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (உ) | 2020 ஆம் ஆண்டில் உடைத்து அகற்றப்பட்ட ரூபா 1,000,000 பழைய சந்தை சமூக மண்டப கட்டிடம் நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 05 சொத்து விடயங்களுக்குரிய உப அட்டவணைகளின் காண்பிக்கப்பட்ட மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 219,537 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது. | எதிர்காலத்தில் உரிய இணக்கமின்மையை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | கணக்கு மீதிகள் சரியாக்கப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சிய பேரேடு மற்றும் கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணை களுக்கு இடையே 11 களஞ்சிய அலகுகளில் ரூபா 266,057 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | அட்டவணைகளை பரீட்சித்து பெறுமதியை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | - மேற்படி - |

### 1.6.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபை கட்டளை சட்டத்தில் (252 ஆம் அதிகாரம்) 266 (அ) பிரகாரம் விடய அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் 2017 ஜூலை மாதம் முத்திரை கட்டணங்களாக பட்டியலிடப்பட்டிருந்த எனினும் அறவிடப்படாதிருந்த ரூபா 3,225,700 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவ குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் அங்கீகாரத்தின் பேரில் கௌரவ ஆளுநர் அவர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 1.6.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ரூபா 26,549 ஆன சொத்துக்கள் விடயமொன்றும் ரூபா 545,237 ஆன பொறுப்பு விடயமொன்றும் மீதி உறுதிப்படுத்தல்கள், பட்டோலைகள் மற்றம் ஒழுக்காற்று கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | மீதி தொடர்பாக ஆராய்ந்து பார்த்து எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பதிவேடுகள் / பதிவேடுகள் மற்றும் கோவைகள் தயாரிக்கப்பட வேண்டும் |

### 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | மாநகர கட்டளைச் சட்டம் 267(1) ஆம் பிரிவு | சிறுவர் பூங்காவின் விளையாட்டு உபகரணங்களைப் பொருத்தி வெளித் தரப்பினருக்கு வழங்கும் செயற்பாடு, தனியார் வகுப்புக்களை ஒழுங்கு படுத்துவதற்காக மற்றும் பிணியாளர் வண்டி சேவை என்பவற்றிற்காக உப உறுப்புரைகள் பிறப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கொழும்பு கண்டி நகர சபைகளில் உப உறுப்புகளை தொடர்பான தகவல் பெற்றுக் கொள்வதற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ)(i) | 2021 யூலை 08 ஆந் திகதிய 2235/5 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி பத்திரத்தில் வெளியிடப்பட்ட | கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்கும் போது அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும் அவதானிப்புக்கு உட்பட்ட 6 கட்டிடங்களில் அவ்வாறான அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளாமல் குடியிருப்புக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | அபிவிருத்தி அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளுமாறு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் II ஆம் பகுதியின் 4(1) ஆம் பிரிவு | | | |
| (ii) | VI ஆம் பகுதியின் 83(3) கட்டளையின் பிரகாரம் 2 ஆம் அட்டவணைப் படி மற்றும் 2009 ஏப்ரல் 17ஆம் தேதி 1597/8 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானில் வெளியிடப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் V ஆம் அட்டவணை | 2014 ஆம் ஆண்டு முதல் 2022 ஆகஸ்ட் 31 வகையான காலப்பகுதியில் அவதானிப்பிற்குட்பட்ட இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத 14 பேரிடமிருந்து தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தண்ட பணத்தை செலுத்துமாறு கடிதங்கள் மூலம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக | - மேற்படி - |
| (இ) | 1983 இன் 09 ஆம் இலக்க விலங்கு கொலைகள் கட்டளை சட்டத்தின் 9அ.(1)(அ) மற்றும் (ஆ) | மாநகர சபை நிர்வாகத்தின் கீழ் விலங்கு கொலை களத்தை நிர்மாணிக்காமல் 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தொடர்ச்சியாக தனியார் விலங்குகள் கொலைகளத்தை நடாத்திச் செல்வதற்காக தற்காலிக அனுமதி பத்திரம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. | பொருத்தமான காணி ஒன்றை வழங்கி முடியுமானவரை பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு குறித்து நிர்மாணத்தை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | - மேற்படி - |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(2) | 2018 ஆம் ஆண்டு முதல் 2021 காலப்பகுதிக்குரிய காலாவதியான ரூபா 1,297,600 ஆன 83 வைப்பு மீதிகள் விடுவிக்கப் பட்டிருக்கவில்லை. | பொது வைப்பு மீதிகளை உரிய கணக்கிற்கு அல்லது அரசின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இலங்கை ஜனநாயக சோஷசலிசக் குடியரசின் | கொங்காவெல பஸ் நிறுத்துமிடத்தின் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக தெரிவு | பணத்தை செலுத்துமாறு கேள்விதாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | பெறுகை வழிகாட்டி கோவையின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறுகை வழிகாட்டி கோவை 5.3.13 (ஈ) ஆம் பந்தி | செய்யப்பட்டிருந்த நான்கு கேள்விதாரர் கேள்வியை பொறுப்பேற்காமல் நிராகரிக்கப்பட்டிருக்கையில் அவர்களுக்கு கேள்வி பாதுகாப்பு வைப்புத் தொகையான ரூபா 40,000 விடுவிக்கப்பட்டு இருந்தது | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும |
| (ஊ) | மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை. | | | |
| (i) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/3 ஆம் இலக்க சுற்றறிக்கை | உப குத்தகை அல்லது உப வாடகைக்கு வழங்குவது முழுமையாக தடை செய்யப்பட்டிருந்த போதும் மாநகர சபைக்கு சொந்தமான அபகஹமுள்ள மற்றும் கொங்காவில் பொது வியாபாரத் தொகுதியின் 20 கடைகளை குத்தகைக்கு பெற்றுக்கொண்ட தரப்பினர் அக் கடைகளை ரூபா 5,000 முதல் ரூபா 22,000 வரை உப குத்தகைக்கு வழங்கியிருந்தனர். | உப குத்தகைக்கு வழங்கியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள துடன் உடன்படிக்கை பிரகாரம் அடுத்த நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) | 2017 ஆகஸ்ட் 03 ஆம் திகதி 2017/3 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி | மாநகர சபையின் அனைத்து வழக்கு தொடர்பாக வழக்கு பதிவேடு ஒன்று பேணி செல்லப்பட்டிருக்கவில்லை | சட்ட விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு வழக்கு பதிவேடு ஒன்று நாளவது வரையாக பேணி செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |

**1.7.2 வரி தேவைகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேவை நாடுனவர்களிடமிருந்து அறவிடப்பட்ட தேசத்தை கட்டியெழுப்பும் வரியை தேசிய உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் ஆண்டின் இறுதியில் காணப்படும் மீதி கடன் கொடுத்தோரின் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு தேசத்தை கட்டியெழுப்பும் வரியாக ரூபா 71,436 ஆன கடன்கொடுத்தோரின் மறை மீதியொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சபைக்கு கிடைக்கின்ற பெறுமதி மற்றும் செலுத்த வேண்டிய பெறுமதி கழிக்கப்பட்டு மீதி மாத்திரம் செலுத்தப்படுகின்றது இப்பெறுமதி கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோரின் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாநகர சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 79,574,869 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 74,897,187 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 38,200,000 | 43,631,653 | 46,554,974 | 44,128,415 | 37,340,000 | 40,100,988 | 36,550,564 | 47,051,737 |
| (ii) | வாடகை | 27,062,000 | 27,299,964 | 26,488,416 | 15,517,135 | 26,401,667 | 22,309,090 | 17,483,218 | 14,705,587 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 15,401,000 | 12,573,547 | 11,793,096 | 980,641 | 22,239,000 | 14,327,107 | 15,022,596 | 201,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 95,030,000 | 100,412,155 | 111,314,931 | 41,740,752 | 105,957,949 | 89,777,804 | 90,180,147 | 52,643,527 |
| | | 175,693,000 | 183,917,319 | 196,151,417 | 102,366,943 | 191,938,616 | 166,514,989 | 159,236,525 | 114,601,851 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| அலகொன்றில் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட 30 நிலுவை வீதவரி ஆதனங்களிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 12,097,338 ஆக இருந்தது. | சிவப்பு அறிவித்தல் மூலம் பிடியாணை வழங்கப் பட்டுள்ளதுடன் அறவிடு வதற்கு முடியாத ஆதனங்களைத் தடை செய்து அடுத்து சட்ட நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) வியாபார அனுமதிப்பத்திரம்** | | |
| மீளாய்வாண்டிற்குரிய வியாபார அனுமதிப்பத்திரங்களைப் பரீட்சித்த போது 698 நிறுவனங்கள் | வியாபார அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளாத | வியாபார அனுமதிப் பத்திரங்களை வழங்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| இனங்காணப்பட்டிருந்ததுடன் அதில் 82 இற்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாமை காரணமாக ரூபா 431,641 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | நிறுவனங்கள் 82 ஆக இருந்ததுடன் மேலும் 431,640.85 அறவிடப்பட வேண்டியுள்ளதாக | |

**(இ) கைத்தொழில் வரி**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய கைத்தொழில் வரி பரிசோதனையின் போது 1464 வியாபார நிறுவனங்கள் இனங் காணப்பட்டிருந்ததுடன் அதில் 162 இற்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படாமை காரணமாக ரூபா 562,000 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | அறவிட வேண்டிய கைத்தொழில் வரி கட்டணங்கள் ரூபா 562,000 என | கைத்தொழில் அனுமதிப் பத்திரங்களை வழங்க வேண்டும். |

**(ஈ) நீர்க் கட்டணம்**

| | | |
|---|---|---|
| 18 ஆண்டுகளாக இருந்து வரும் ரூபா 4,802,812 ஆன நிலுவை நீர்க் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நீர் செயற்திட்டத்தை நீர் வழங்கல் சபைக்கு கையளிக்கும் போது நிலுவை தொகையை தீர்வு செய்யும் போது நிலுவை தொகையை தீர்வு செய்ய முடியாமல் போனதாகவும் அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை நீர்க் கட்டணங்களை அறவிடுதல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடமை அல்லாத நடவடிக்கை ஒன்றுக்காக மாநகர சபைக்குரிய வாகனம் ஒன்று 2022 மார்ச் 12 மற்றும் 13 ஆகிய இரு தினங்களில் ரூபா 10,736 செலவிடப்பட்டு 61 லீட்டர் எரிபொருளை பயன்படுத்தி 441 கிலோமீட்டர் தூரம் பிரதேசத்துக்கு வெளியே ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | இப்பிரயாணத்திற்காக அழைப்பு கடிதம் அல்லது வருகை சான்றிதலோ கிடைக்கவில்லை என்பதாக | சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய 08 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 75,340,140 ஆக இருந்தது. | பெறவேண்டிய கணக்கு மீதிகளை அறவிடு வதற்கும் கொடுப்பனவு களை தவிர்ப்பு செய்பவர்களுக்கு சட்ட ரீதியான நடவடிக்கை களை எடுப்பதாகவும். | பெற வேண்டிய கணக்கு மீதிகளை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 2 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 107,254,465 ஆக இருந்தது. | நீண்டகாலமாக உள்ள மீதிகளை எதிர்காலத்தில் சீராக்குவதாக | செலுத்த வேண்டிய கடன் மீதிகளை தீர்வு செய்ய வேண்டும். |
| (இ) | 06 ஆண்டுகளுக்கும் 28 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் இருந்து 35 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 491,080 கூட்டுத் தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்வு செய்யப்பட்டிருந்த போதும் கணக்கில் இருந்து அகற்றுவதற்கு தவறி இருப்பதாகவும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் | முற்பண மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | 2012 ஆம் ஆண்டுக்கு முன்னர் புகையிரத திணைக்களத்திடமிருந்து பெற வேண்டிய ரூபா 140,400 ஆன பிணை வைப்பு ஒன்று மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கொடுப்பனவு செய்வதற்குள்ள மீதிகளுக்காக ஈடு செய்யப்பட்டுள்ளதாக புகையிரத திணைக்களத்தினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும் |
| (உ) | ஒரு முறையான சாத்தியவள ஆய்வு ஒன்று இல்லாமல் 2020 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 514,080 ஆன 136 கொங்கிரிட் கழிவுப்பொருள் தொட்டிகள் மீளாய் வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு விளைவற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு குறித்து வைக்கப்பட்டுள்ள ரூபா 26,460 ஆன 07 கழிவு பொருள் தொட்டிகள் உடைந்து சிதைவடைந்து இருந்ததுடன் ரூபா 68,000 ஆன 18 தொட்டிகள் பற்றாக்குறையாக இருந்தன. | மீண்டும் கொள்வனவு செய்யும் போது முறையான சாத்தியவள ஆய்வு ஒன்றுடன் கொள்வவு செய்வதற்கும் பகிர்ந்தளிக்கும் நடைமுறையை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | முறையான ஆய்வு ஒன்றின் பின்னர் கொள்வனவு செய்யப்பட வேண்டும் |
| (ஊ) | மீச்சந்தை தொகுதியின் மேல் மாடியில் முப்பரிமான சினிமா அரங்கொன்றிற்காக 2000 சதுர அடிக்காக உடன்படிக்கை செய்யப்பட்டு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் உடன்படிக்கை செய்யப்பட்ட அளவை மிகைத்து 3972 சதுர அடி | படியிலிருந்து சினிமா அரங்கு வரை 191 சதுர அடி அளவிலான நிர்மாணமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக அறிக்கையிடுமாறு மாநகர பொறியியலாளருக்கு | உடன்படிக்கையை முறைப்படுத்துவதற்கு ம் வாடகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| பயன்படுத்துவதாக 2022 நவம்பர் 11 ஆம் திதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது அதன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,719,191 ஆன வருமானமொன்று சபைக்கு இழக்கப்பட்டுள்ளது. | அறிவிக்கப்பட்டுள்ளதாக |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மாநகர சபைக்குரிய இடம் ஒன்றில் வெளி தரப்பினரால் தமது செலவில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த ரூபா 195,000,000 ஆன 4 கட்டிடங்களை முறையாக நகர சபைக்கு கையேற்காமல் அப்பெறுமதியை நகர சபைக்கு சொந்தமான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தன. | நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்குவதாக | கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை-** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் காணப்பட்ட ரூபா 1,970,000 ஆன 05 வாகனங்கள், இயந்திரமொன்று, 1 ஆண்டு முதல் 11 ஆண்டுகள் வரையான காலவீச்சில் விளைவற்றுக் காணப்பட்டன. | திருத்தம் செய்யக் கூடிய சொத்துக்களைத் திருத்தம் செய்தற்கும் முடியாதவற்றை கைதவிர்ப்பதற்கும் பொருத்தமான நடவடிக்களை எடுத்து வருவதாக. | திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கும் அல்லது கைதவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சாத்தியவள ஆய்வொன்று மேற்கொண்டு கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக 2010 ஆகஸ்ட் 18 ஆந் திகதி ரூபா 2,000,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட விஹாரகம்வத்த காணி விளைவற்று காணப்பட்டது. | சுண்ணாம்புக்கல் அகழ்விற்காக அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாநகர சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 31 பதவிகளில் 144 வெற்றிடங்களும் 02 பதவியில் 10 மிகைகளும் காணப்பட்டன. | அரசின் மூலம் கொண்டு வரப்பட்டுள்ள கொள்கை ரீதியான தீர்மானத்தின் பேரில் அனைத்து ஆட்சேர்ப்பும் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1 ஆண்டுமுதல் 5 ஆண்டுகளுக்கு இடையிலான காலப்பகுதியில் இட மாற்றம் செய்யப்பட்ட, ஓய்வுபெற்ற மற்றும் சேவையை விட்டுச்சென்ற 34 உத்தியோகத்தர்களிடமிருந்து இடர்கடன், விழா முற்பணம் மற்றும் விசேட முற்பணம் என மொத்தம் ரூபா 2,638,155 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | ஊழியர் கடன் அறவீடு மற்றும் கொடுப்பனவு பரீட்சிக்கப்பட்டு எதிர்வரும் காலங்களில் சரியாக பேணிச் செல்வதாக | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.6 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **எட்வர்ட் விளையாட்டு அரங்கின் பார்வையாளர் கூடத்தை நிர்மாணித்தல் - ரூபா 1,935,633**<br>எட்வர்ட் விளையாட்டு அரங்கின் பார்வையாளர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு திருத்தம் செய்யப்படாமல் நிறை வேற்றப்பட வேண்டிய வேலைப் பகுதிகளில் ரூபா 1,132,237 ஆன 16 வேலை விடயங்கள் நிறைவேற்றப் படாமல் ரூபா 404,876 ஆன மேலதிக வேலை விடயங்கள் நிறைவேற்றப் பட்டிருந்தன. 14 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் சுவர் மீது பொட்டி இடுவதற்காக ரூபா 32,623 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் பௌதீக பரிசோதனையின் பிரகாரம் அவ்வாறு பொட்டி இடுதல் இடம் பெற்றிருக்கவில்லை. | கூரையை திருத்தம் செய்யும் போது கூரையில் சில அஸ்பெஸ்டஸ் தகடுகள் வெடித்திருந்ததால் முழு கூரைக்கும் புதிதாக அஸ்பெஸ்டஸ் கூரை தகடுகள் இட்டு மீண்டும் கூரையை திருத்தம் செய்ய நேர்ந்ததாக | மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 473,786 ஆன மதிப்பீடொன்றின் மீது நிர்மாணிக்கப்பட்டிருந்த ஹுலங்கமுவ சுதந்திர மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கொங்கிரீட் வீதியின் 31 மீற்றரில் 27.3 மீற்றர் மாநகர சபையில் அப்போதிருந்த உறுப்பினர் ஒருவரின் வீட்டுக்காக நுழைவதற்கு மாத்திரம் பயன்படுத்தக் கூடியதாக இருந்தது. | நிதி ஏற்பாடு பற்றாக்குறை காரணமாக எஞ்சிய பகுதியை அபிவிருத்தி செய்யப்படவில்லை எனப்தாக | கூடிய நலனாலிகள் தரப்பினர்களுக்கு பயன்படுத்தக்கூடிய வகையில் செயற் திட்டங்களுக்காக நிதியம் ஈடுபடுத்தப்பட வேண்டும் |